456

456

ஆறுமுகமங்கலம்

சுடலைமாடசுவாமி மீது

தேவகானம்.

வேல்மயிலவன் அனுக்ரக கடாக்ஷ செந்தமிழ் வித்துவான்

சில்லாங்குளம்

வீரப்பெருமாள் ஆச்சாரியாரவர்கள்

இயற்றியது.

தூத்துக்குடி முருகவிலாஸம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1934. அணா 2.

உ

துணையிலான் துணை.

ஆறுமுகமங்கலம்

சுடலைமாடசுவாமி மீது

தேவகானம்.

இவை

எட்டயபுரம் சமஸ்தானம்

சில்லாங்குளம் விஸ்வப் பிர்மகுல திலக

சங்கரலிங்க மாச்சாரியாரவர்கள் குமாரர்

வேல்மயிலவன் அனுக்ரக கடாக்ஷ செந்தமிழ் வித்துவான்

வீரப்பெருமாள் ஆச்சாரியாரவர்கள்

இயற்றியது.

தூத்துக்குடி

முருகவிலாஸம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1934.

இதன் விலை] [அணா 2.

உ

எவனொருவன் அவனே துணை.

ஆறுமுகமங்கலம் சுடலைமாடசுவாமி மீது

தேவகானம்.

முழுமுதற் கடவுள் வணக்கம்.

கவி.

பாட்டாளை பாடிவரப் பரிசளியாக் கயவர்தமைப்
பகைத்துக் கொல்லக்
காட்டாளை யுருவெடுத்த மாசாண முண்டனொடு
கலந்த நட்புச்
சோட்டாளை யெனுஞ்சுடலை திருவிளையாட் டனைத்துமருள்த்
துதியாய்ப் பாட
கோட்டாளை முகக்கடவுள் மலர்ப்பதத்தை இதயமதில்க்
குறித்து வாழ்வாம்.

மதனசேகரன், சந்திரவதனி யென்ற இருவருக்கும் வினாவிடை.

பெண்:—

ஆருயிர்க் காதலா! இன்று இந்நகரத்தின் கண் அநேக ஆடவர்களும் பெண்களும் அழகிய ஆடையாபரண பூஷித அலங்கிர்தமுடையவர்களாய் கும்பல் கும்பலாய்க் கூடிக் கொண்டு புறப்படுங்கள் புறப்படுங்கள் என்று வெகு டாம்பீகரமாய்ப் பேசிக்கொள்கிறார்களே விஷேட மென்ன?

ஆண் :—

திருப்புகழ் வர்ணம் சங்கொருகை வில்லொருகை
என்ற வர்ணத்தைத் தழுவிப் பாடவும்.

பல்லவி.

பொன்னுலவும் அன்னநடை மின்னரசி யென்னிடநீ
பொன்னென உரைத்ததை நான் புகல்வேனே
கன்னல் கமுகென்னவளர் மன்னுமெழில் தண் பளனம்
கங்கை நதி பொங்கி வரும் வளமோடு
பொங்க மிகும் ஆறுமுக மங்கலமெனு நகரில்
பொங்க மிகு ராஜ சிங்க முதலாளி
சங்கிதவில் மேளதாள மங்கள கல்யாண யோக
சம்பிரம விநோதனுக்குத் திருநாளாம்.

வசனம்.

காதலி கேட்பாயாகுக! முன்னம் திருப்பாற்கடலிலும் ஆதிசேடனென்னும் சர்ப்ப சயனத்திலும் ஆலிலையிலுந் துயின்று திருப்பாற்கடலையுங் கடந்து தேவர்களுக் கமுதம் பகிர்ந்து, அடியவர் இடர் தணந்து அன்பரிதயத் தமர்ந்து ஸ்ரீவைகுந்தத்திலும் திருவரங்கத்திலும் அரசு வீற்றிருந்து நாபிக் கமலத்தினிடமாய் நான்முகக் கடவுளைப் பயந்து காளிங்க நர்த்தனம் புரிந்து கஜேந்திரனைக் காத்தருள் புரிந்து அதல சுதல பாதலமென்ற திரிலோகமனைத்தும் நிறைந்து சர்வ வல்லமை முழுது முணர்ந்து அளவிடற்கரிய மாயா விநோதம் புரிந்து தயாதன் மதலையாய்ப் பிறந்து தசாவதாரனெனும் பெயர் சிறந்து மனமகிழ்ந்து

ஆனந்தத் திருநடனம்புரிந்து எழுந்தருளிய ஸ்ரீமந்நாராயணக் கடவுளது கௌத்துவாபரணந் தங்கிய திருமார்பில் விளங்கும் மகா லக்ஷ்மி எக்காலும் விகசிதம்செய்யும் ஆறுமுக மங்கலமென்னும் ஸ்ரீகைலாயப் பதியில் கோயில் குடிகொண்டருளும் பூலோகப் பாண்டியன் அல்லது சுடலைமாடசுவாமி யென்னும் தெய்வத்துக்கு மகோற்சவக் கொடை இன்று ஆடி மாசம் செவ்வாய்க்கிழமை யல்லவா? ஆ! ஆ!! வெகு கண்காக்ஷியாயிருக்கும். அக்கோயில் ஆதீன கர்த்தாவர்கள் சைவ சித்தாந்தம் முத்துக்கருப்ப பிள்ளையவர்கள் அருந்தவப் புதல்வன் தெய்வத்தடியா பிள்ளையென்ற பூசாரித்தெய்வம் அநேக ஆடல்பாடல்முதலிய மேளதாளங்களோடு சகாகோடி சங்கம் மருளாடிகளும் மற்றவர்களும் புடைசூழ திங்கட்கிழமையன்று கொட்டாரக்குரிச்சி பத்திரகாளியம்மன் கோயிலிலிருந்து குடியழைத்து வருவதும், மறுநாள் ஆற்றில் ஸ்நான முதலியன செய்து முடித்து நிறைந்த வெள்ளிக்குடம் கொண்டு வருவதும், சுவாமிக்குப் படிகளைவதும், கும்ப மேற்றுவதும், சுவாமியை அலங்கரிப்பதும் கற்பூர தீபாராதனை முதலிய மதுமாமிசப் படைப்பேற்றுவதும் மத்தியானக் கொடை என்றும் சாமக்கொடை என்றும் முறைப்படி நடத்துவதும் பேச்சியம்மையோடு மாசாண முண்டனுக்கு கணியன் கைவெட்டு, முதலிய உதிரதிரளை மயானத்தில் கொடுப்பதும் வில், கணியன் முதலிய வீர முரச வாத்திய கோஷ்டியும் வாண வேடிக்கையும் இன்னம் பற்பல மகிமையோடு பூக்குளி மூழ்குவதும் பார்க்கப் பார்க்கப் பரவசமம்மா. கோகிலமே, அவன் மகிமையை ஆயிரம் நாவையுடைய பணமுடியோனாலுங் கூறுவதரிதென்றால் ஓர் நாவையுடைய யான் உரைப்ப தெங்ஙனம். அவன் மகிமையை அவன் தான்

அறியவேண்டும். வேறு எவன் அறிவான். ஒருவாறு சிவன் அறிவான். ஏனெனில், அவன் அவனே யாதலால் கேட்டாயா மடமயிலே.

பெண்:—

சுவாமி! அடியாள் ஆனந்தக் கடலில் மூழ்கினேன். இப்போது இவர்கள் புறப்படுவது ஆறுமுக மங்கலம் சுடலை மாடசுவாமி கோயிலுக்குத்தானோ? ஹா! ஹா!! அற்புதம். இன்று நல்லகாலம் நான் அந்தக்கடவுள் மகிமையை சிற்சில பெரியோர்களால் கேள்வியுற்றிருக்கிறேன். ஆயினும், நீங்கள் அந்தப் பகவான்மீது ஒன்று பாடுங்கள்.

ஆண்:—

மடமயிலே! இதோ பாடுகிறேன். கேள்.

கந்தா காருண்யனே என்ற வர்ணம்.

பல்லவி.

தெய்வ வேம்படியான் கதிர் வேல்க்கொடியான்
பாம்பணிந்த ஈசனுக்கு பாலனாக வந்தவன்
பால் குடிக்கும் பிள்ளையைப்போல் பார்பதிக் குகந்தவன்
மாயக் காரனம்மா கோலக் காரனம்மா
வெள்ளை வர்ணத் தேரிலேறி வேகமாகச் செல்லுவான்
மீறிநிற்குந் துஷ்டர் தம்மை மேதினிக்குள் வெல்லுவான்
பொல்லா மாடனம்மா புலை மாடனம்மா
ஆடல் பாடல் மேளதாள ஆதியந்தம் பெற்றவன்
ஆடு வில்லினைசைக் கண்டன்பு பெற்ற கொற்றவன்
மகா சூரனம்மா சுத்த வீரனம்மா.

தோகையரு விருத்தப் பண்.

நாறுகுடங் கட்குடித்துக் கமாடங்கா வெறியனுக்கு
நுரையைத் தள்ளி
ஆறுகுடங் கட்கொடுத்தாலடி நாவுக்கமைந்திடுமோ
அம்மா அந்த
மாறுபடா மன்னனுக்கு மதுக் குடங்களொரு கோடி
வைத்துப் பின்னும்
சீருபடச் சாராயம் கன்னே கன்னேயாக
வைத்துச் சேவிப்பாரோ.

ஷை பாட்டு.

பொல்லாச் சோரனம்மா போதைக் காரனம்மா
பாரமான விஸ்வரூப பாக்கியத்தைப் பெற்றவன்
பாரளந்த மாயனுக்குப் பக்ஷமுற்ற கொற்றவன்
(வேர்படியான்)

வசனம்:— தெவிட்டாத் தெள்ளமுதே! நான் பகட்டாய்ப் பாடியதைப் பார்த்தேயா.

பெண்:—

நாதா! நீர் பாடிய பாடல் தேவாமிர்தத்திலும் சிறந்ததாய்த் தோன்றுகிறது. இப்போது நாமிருவரும் அந்த ஆறுமுகமங்கல சடலைமாடசுவாமி

கழுகுமலை குருவி குளம் என்ற பிளேட் வர்ணம்.

பல்லவி.

கோயிலுக்குப் போவோம் வாரும் என்சுவாமி என் துரையே
கோகிலம் போல்க் கூவி வாரும் எனைக்

கொஞ்சி யொரு முத்தந் தாரும் மனக்
குதுகலமாய்ப் போவாம் வாரும் பனிக்
குமுதச் செங்கனிப் பவளப் பங்கயக்
குமரிக்கின்புரப் பழகிப் பொன் மயக் கோயிலுக்கு

ஆண்:—

மடவனமே! உன் மனப்படி நீ அந்த மந்திர மூர்த்தியின் மகிமையை சிற்சில பெரியோர்களால் கேள்வியுற்றதாய் முன்னமே தெரிவித்தாயல்லவா? அதை உனக்குத் தெரிந்த மட்டும் இனிதாய்ப் பாடு பார்ப்போம்.

பெண்:—

மதன சௌந்தரா! இதோ எனது பனிவாய் திறந்து இனிதாய்ப் பாடுகிறேன். நீங்கள் தனியாயிருந்து கனிவாய்க் கேளுங்கள்.

ஷை பாட்டு வர்ணம்

ஐக்கோர்ட்டு முதலாளியாம் என் சாமி என் துரையே
அவன் அகில மெச்சு முதலாளியாம்
அவன் அருள் நிறைந்த முதலாளியாம் தெய்வப்
பொருள் நிறைந்த முதலாளியாம் திரு
வழகுக் கிசைந்த களபக் குங்குமத் துளபப்
பொன்மயக் குளகக் குஞ்சர ஐக்
வெள்ளை வர்னக் குதிரை மீது என் சாமி என் துரையே
வீதி வழி வாரபோது வேகமுடன் வார போது
வேட்டையாடி வாரபோது அவன்
வேடிக்கைப் பார்த்திடக் கோடிக்கணக்கான
மோடிக் குணத்தவர் பாடித் துதித்திடும் கோயி

காடு சுற்றிப் பார்ப்பானம்மா என் சாமி என் துரையே
கச்சை கட்டித் திரிவானம்மா
பக்ஷமுற்றுத் திரிவானம்மா மன
அச்ச மற்றுத் திரிவானம்மா அந்தக்
கருத்தத் துரையின் நிருத்தப்படிக்கி
விருத்திக்குரிய பொத்தப்படிக்கி காடு சுற்றித்

மருக்கொழுந்து மாலைக்காரன் என் சாமி என் துரையே
மஞ்சணைப்பூ மாலைக்காரன்
மல்லிகைப்பூ மாலைக்காரன் மணி
மாகதப்பொன் மாலைக்காரன் வட
மதுரைச் சந்தனம் பரவிப் பூசிய
அருமைக் கிசைந்த கருமத் துரையே மருக்

கையிலே மலைச் சுடலைமாடன் என் சாமி என் துரையே
கங்கணக்கைச் சுடலைமாடன்
கற்பூரச் சுடலைமாடன் திருக்
கருணை மழைச் சுடலைமாடன் தேவ
கான மயில்ப்பரி ராஜ மணித்துரை
வேத வீரப் பெருமான் வித்துவக் கோயி

வசனம்.

மன்மத வசீகரா! குன்று பிளந்தது அயில் கொடுங்
கொலை களவு செய்பவனுக்கு ஜெயில் செந்திக்
குகக் கடவுளேறியது மயில் இனிதாய்க்
கூவி மகிழ்ந்தது குயில் கொங்கை
குலுங்க நடந்தால் ஒயில் நாம்
கொஞ்சி நடந்திட வெயில் ஆதலால்
கோலமா யேறுவோம் ரெயில் அதிவிரைவாய் புறப்படுங்கோ.

ஆண்:—

வண்ணக் கடலமுதே

வானத்திலிருந்து நிறைந்தது வெயில் அழகிய
வண்ணத்தோகை விரித்தாடுவது மயில் வெகு
மதுரகானமாக பாடுவது குயில் முன்னம்
மகா சூரனைக் கொன்றது அயில் கொடிய
மாயக்கள்வனுக்கு கிடைப்பது ஜெயில் பெடை
மடவனத்தைப்போல் நடந்தால் ஓயில் இன்று
மங்காமலடிக்குது காற்று வெயில் ஆதலால்
மதிப்புடனேறிச் செல்வோம் ரெயில் என்று

தெரிவித்தாய் மென் சொலாய்! வெயிலேறிச் சென்றால் கால் நோகும் இது மெய். மெயிலேறிச் சென்றால் மேல் நோகாதோ? நோகும். ஏனெனில் அங்குள்ள ஏக தடபுடல் ஜனக் கூட்டங்கள் முதலிய நெருக்கத்தால் அன்றியும் ரெயிலிலிருப்பதும் சரி, சென்ட்ரல் ஜெயிலிலிருப்பதும் சரி. ஆதலால் அது வேணடாம்.

நேரிசை வெண்பா.

தேரேறிச் செல்லும் திசை மன்னர் சென்றதைப்போல்
காரேறிச் செல்லுவோம் கண்மணி! சீராரும்
ஆறுமுக மங்கலத்து ஐக்கோர்ட்டார் சன்னிதிக்கு
சாருமனத் தன்புடனே தான்.

இருவரும் புறப்பட்டு ஆறுமுக மங்கலம் போய்ச் சேருகிறார்.

ஆண்:—

ஒளியமே! இது தான் ஆறுமுகமங்கலம். இங்குள்ள மாடமாளிகை கூடகோபுரங்களைப் பார்த்தனையா. ஹா! ஹா!

கவி.

நிலமதிமுகமோ திலகமோ கண்ணே
நிறைநெடு மங்கலநாணே
இலகுபூண் முலைமேலாரமோ உயிரி
னிருக்கையோ திருமகட்கினிய
மலர்கொலோ மாயோன் மார்பினன் மணிகள்
வைத்தபொற் பெட்டியோ வானோர்
உலகின் மேலுலகோ வூழியின் இறுதி
உறையுளோ யாதென உரைப்பாம்.

வசனம்.

என்ன விசேடம்! இப்பட்டினம் பூமாதேவியினுடைய திருமுகந்தானே அல்லது அந்த முகத்துக்கின்றியமையாத நேத்திரந்தானே அல்லது நிறைவாகிய நித்திய மங்கல சூத்திரந்தானே அல்லது விளங்குகின்ற ஆபரணங்களை யணிந்த ஸ்தனங்களின் மேல் புரள்கின்ற முத்து வடந்தானே அல்லது உயிரின் இருப்பிடந்தானே அல்லது அந்தப் பெரிய பிராட்டிக்கு இனிதாகிய செந்தாமரைப் புஷ்பந்தானே அல்லது ஆச்சரிய குண சேஷ்டிதங்களையுடைய இறைவனது திருமார்பில் பிரகாசிக்கின்ற கௌஸ்துவாபரணங்கள் வைக்கப்பட்டிருக்கிற பொன்னால் செய்யப்பட்ட பெட்டிதானே அல்லது யுகாந்த காலத்தில் சகல உயிர்களெல்லாம் சென்றொடுங்கு மிடமாகிய ஸ்ரீமந் நாராயணனது திருவயிறுதானே இவற்றை யாதென்று துணிந்து சொல்லுவோம். மின்னாரே! இது நிற்க, இப்பட்டினத்தின் நாற்றிசையினும் அளவிடற்கரிய பற்பல வளப்பங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் எடுத்து விஸ்தரிப்பதென்றால் காலதாமதமாகும். புறப்படு அவசரம் ஆலயம் போய்ச் சேருவோம்.

பெண்:— சாச குணாளா! சந்தோஷம்.

ஆண்:— (இருவரும் சந்நிதியடைகிறார்.)

தோடவிழும் பூங்கூந்தல் தோகையே நாமிருவரும்

ஞான பண்டித மோதிலால் என்ற வர்ணம்.

பல்லவி.

சுவாமி தெரிசனம் செய்வோம் சடலைமாட (சுவாமி)
தாமிதமாக நின்றால் தருணங்கிட்டாதடி மடமயிலே
காம ரஞ்சிதக் கடலே கருங்குயிலே (காம)
கிழக்கு முகமாய் நிற்கும் விளக்கொளி மகிமையை நீயாரு
பழக்க முற்றேங்குங் கிளியே பச்சைக் கிளியே
(சுவாமி)
வாசந்ததும்பி நிற்கும் மாசாணைச் சுடலையின் முன்னின்று
பேசும் சிங்கார வர்ணமே
பெடை யன்னமே (சுவாமி)

வசனம்:— ஆரணங்கே அறஞ்செய விரும்பு என்ற சொல், பெரிய ஒளவைப்பிராட்டியார் சொல், என்றும் அழியாமல் நிற்கும் அறம் செய்தாரில் அழியாமல் நிற்குமோ அறம் செய்யாதாரில், அருவி ஆற்றுப் பெருக்கால் விளைவது நெல், அழகிய ஆபரணத்துக் கமைந்தது வைரக்கல், பருத்தியை அறைத்துப் பஞ்சாக்குவது மெல், நாலில் அழகாய் நெய்வது தான் மல், குருகுலத் தர்ச்சுனனுக் கமைந்ததுதான் வில், மெய் யரிச்சந்திரனுக் கமைந்தது சொல், முல்லை யரும்பைப் போல் தோனுது உன் பல், பெடை யனமே யென்னருகில் வந்து நில், இந்த அப்பன் கோயிலில் முழங்குது பார் வில், அணுவளவுந் தவறாதம்மா இந்த அறுமுகமங்கலத்தான் சொல்.

பெண்:—

செந்தமிழ்க் கடலே! திருமால் தரித்ததே நேமி, இந்த தெக்ஷண பூமியே பூமி, வள்ளி தெய்வானைக் கொரு மாமி, அந்த சேயினைதான் சிவகாமி, இந்த தெய்வத்தின் பெயர் சுடலை மாடசுவாமி.

ஆண்:—

செல்லக் கிளியே! நீ தெரிவித்தது மெய். இவனை பூலோகப் பாண்டியனென்றும் சொல்லலாம். இது நிற்க, இன்னமொன்று வளர்ந்த பணமுடியோன் வசிப்பது பாதாளம், பெரிய மாந்திரவாதிகள் மிகுந்தது மலையாளம், கொடிய மத யானைகள் மிகுத்தது மலையாளம், இந்த மந்திர மூர்த்தி ஜெயித்து வந்தது மலையாளம், எக்காலும் இங்கு மங்காமல் முழங்குது மேளதாளம், இந்த மாசாணைச் சுடலைக்குக் காவல் பூத வேதாளம், எவர் மனத்தாலு மறியமுடியாதம்மா இவனது ஆழ நீளம். கட்டிக்கனியே நான் இந்தக் கடவுளை விசுவாசத்தோடு பாடித் துதி செய்வேன் கேள்.

பெண்:—

சங்கீத திலகமே! சந்தோஷம்.

பண்டிதமோதிலால் என்ற வர்ணம்.

பல்லவி.

சோதிமணிப் பொதுவில் நின்றிடும் — சுடலைமாடசுவாமி
சுடலைமாடசுவாமி—உனைத் துதித்தேன் மாடசுவாமி
(பரஞ் சோதி)

ஆதிமுதற் பழம்பொருளாம் ஆக்ஷிசெய்த முதலாளி
பாதிமதிச் சடையன் மெய்ப்பொருள்—படைத்திடும் ஆளி
படைத்திடும் ஆளி—நன்மை பலிக்கும் நீடூழி (பரஞ்)

ஆற்றுவளம் நிறைந்திலங்கும் ஆறுமுக மங்கலத்தில்
வீற்றிருக்கும் விமல பூரண—விசயனே வருவாய்
விசயனே வருவாய்—அருள் விகிதமே தருவாய் (பரஞ்)

ஐந்து கலம் அரிசி முதல் ஆடுகிடாய் கோழி பன்றி
பந்திமுதல்ப் படைப்பலங்கிர்தப்—பவுசு பெற்றவனே
பவுசு பெற்றவனே—பூதப் படைகள் பெற்றவனே
(பரஞ் சோதி)

ருத்ரபூசைக் காலமெல்லாம் நூறுகுத்திச் சாராயம்
சத்திபூசை செய்வதைப்போலுந்தன்—சமர்த்தெல்லாமாயம்
சமர்த்தெல்லாமாயம்—சுக சௌவுக்கிய சகாயம்
(பரஞ்)

தொகையறு.

திண்டுக்கு முண்டனே திருவுள சகாய னே
தெய்வீக வைபோக னே
மண்டுக்கு மன்னனே மனனிலை உதார னே
மாசாண சையோக னே

ஷை பாட்டுத் தொடர்ச்சி.

கயிலாய பருவதத்தில் கனகவல்லித் தாயினிடம்
ஓயிலான திருவருள்மொழி—உறுதி பெற்றவனே
உறுதி பெற்றவனே—தொழில் முறைகள் கற்றவனே
(பரஞ் சோதி)

மலையாள தேசம் சென்று மாந்திரவாதிப் புலையனிடம்
நிலையான மாவி சக்திபலி—நிஷ்டை முடித்தவனே
நிஷ்டை முடித்தவனே—சட்ட திட்டம் படித்தவனே
(பரஞ்)

தொகையரு விருத்தப் பண்.

வரந்தருந் தெய்வமென்றும் மாசாணச் சுடலையென்றும்
நிரங்காத் தெய்வமென்றும் நெடும் படைக்காரனென்றும்
இறந்தரும் சுவாமியென்றும் திகழ்ந்தஜக்கோட்டாளென்றும்
விரைந்தருள் சுரந்து காற்றும் வேம்படித் தெய்வமென்றும்
கரந்த பாற்குடத்தானென்றுங் கருங்கச்சைக் கடவுளென்
பிறந்திடும் குழந்தைக்கெல்லா ம் [றும்
பேர்க்கணக் காளியென்று ம்
நிரைந்திடும் உலகுக்கெல்லாம் நெடும்புகள் பாவச்செய்து
அறந்தழைத்திடவே வாழ்ந்த
அண்ணாலே அருள் செய்வாயே.

ஷடி பாட்டு.

பேர்பெருகப் பாய்ந்து நிற்கும் பேய்க்குதிரை வாகனத்தை
சீர்பெருகக் கல்லணை வைத்துநீ—சீக்கிரம் வாரதெப்போ
சீக்கிரம் வாரதெப்போ வினை
தீர்த்தருள் செய்வதெப்போ (பரஞ் சோதி)

கற்பகப்பொன் நிறைந்திலங்கும் கண்காக்ஷி சபைத்திருநாள்
அற்புதச்சொல் விளங்குமுத்தமிழ்— அருள் வீரப்பெருமான்
அருள் வீரப்பெருமான் இசை
அலங்கிர்தத் திருநாள் (பரஞ் சோதி)

வசனம்.

சித்திரப்பதுமையை யொத்தவளே! இது தெய்வத் தடியாபிள்ளை ஏற்றிவைத்த தீபம். இதைத் தெரிசித்தால் தீர்ந்துபோம் பாவம். கடவுளை சேவைசெய்யாதவர்க்கேது லாபம். மனதிலே தெரிந்து குற்றம் செய்தால் இடுவான் சாபம். தெரிந்தவர்க்குத்தான் தெரியுமம்மா இவன் கோபம்.

பெண்:—

சேம குணகரா! திருமால் தரித்தது நாமம். சகல தேவர்கள் வளர்த்தது ஓமம். மகிமைச் சித்தசன் வளர்த்தது காமம். இந்தத் தெய்வமிருப்பது ஈமம். உதிர திரளை கொடுப்பது சாமம். இவன் திருவாய் திறந்தால் சேமம்.

ஆண்:— இதற்கு வேறு ஆக்ஷேபனையா.

காதலி! இப்பகவான்மீது இன்னமொன்று பாடித் துதிசெய்கிறேன் கேள்.

ஞான பண்டித மோதிலால் என்ற வர்ணம்.

பல்லவி.

பேய்க்கு ராஜாளி இவன் தான் பிணங்கள் தின்னும் (பே)
வாக்குப் பிசகாத் தெய்வம்
மாசாணச் சுடலை யெனுந் தெய்வம்
பூக்குளி மூழ்குமெய்த் தெய்வம்
பூர்வீகத் தெய்வம் (பூ)
விளங்கு வேம்படிக்காரன்
விளையாடும் விகசித சிங்காரன்
முழங்கும் சங்கீத் வில் வீரன்
முப்பூசைக்காரன் (முள)
வேகவாய் வென்னத்தாவும்
வெள்ளைக் குதிரையின் மிசை பெப்போதும்
ஏக போகமாய் நிற்பவன்
ஈரேழு லோகம் ஏக
துதிக்கும் பூத கணங்கள்
சுற்றித் திருவாசல்க் காவல் செய
மதிக்கும் சின்ன முதலாளி
மங்காத ஆளி பே

கலித்துறை.

பேயோடு பேய்க்குப் பெரும் பேயதாய் வந்த
பேய்ச் சுடலை
தீயோடு பச்சைப் பிணந் தேடித் தின்று
செழிப்புடனே
வாயோடு வாய்மடித் தண்ணாந்து பார்த்து
வரும் பொழுது
காயோடு காய்ப்பழம் பூவா கும் பிஞ்சுடன்
காய்ந்திடுமே.

ஷை பாட்டு.

திருவிளாக் காகஷிப் பொருளாம்
தெய்வத்தடியா பிள்ளையின் அருளாம்
பரிமளப் பூசை அருளாம்
பாக்யப் பொருளாம்
சுடர்மணிப் பூவொரு புரமாம்
துட்டுத்தடி வல்லயமொரு புரமாம்
படைவீரர் போற்றுந் திறமாம்
பாக்யம் தருமாம் பேய்க்கு
வித்வ விளம்பர சுய தொக்க
வீரப்பெருமாள் சொல் ஞானக
நித்யச் சத்துச் சிதானந்த
நீதிவேதாந்த பேய்க்கு

வசனம்.

ரத்தினமே! இவனது சத்தியே சத்தி. இந்த இறைவனுக் கருள்புரிந்தது பராசத்தி. எங்கும் பரிமளிக்குது சாம்பிராணிப் பத்தி. இவன் எதிரேயிருக்குது சாராயக்குத்தி. ஏகமாய்

சட்குடம் இவனைச்சுத்தி. இலங்குது ஓமகுண்டத்தில் முத்தீ இங்குதா னமைந்தது மந்திர சித்தி. எல்லார்க்குங் கிடைக்குமோ முத்தி. இவன்தானம்மா ஏகச்சக்ரவர்த்தி. எக்காலும் அடைவான் விர்த்தி. இலகுலுங்காச் சாமத்தில் ஈமமெல்லாம் சுத்தி. பேயோடு பேயாய்க் கத்தி, பிணங்களைக் காலாலெத்தி பிரங்குவல்லயத்தால்க்குத்தி, இளம் பிணத்தைத் தின்று பழம் பிணத்தைப் பசாசுகளுக்குக் கொடுத்து துடிதுடித்து வாய்மடித்து பற்களை நெருநெரு வென்று கடித்து வஞ்சனையில்லி செய்யும் மாந்திரவாதிகளைப் பிடித்து வாயில் ரத்தங்கக்க அடித்து மணித்தடியால் இடித்து மார்பெலும்பை ஒடித்து ரத்தத்தை அள்ளிக்குடித்து ஆதாளிச் சத்தமிட்டாடி நிற்கும் அண்ணலின் மகிமையை இன்னம் திண்ணமாய் பாடித் துதிசெய்வேன் கேள்.

கலித்துறை.

கோடை இடி மின்னலொன் ருகக் கூடிக்
குமுறுவபோல்
பீடமதில் நின்று மாசாணப் பேச்சி முன்
பேய்ச்சுடலை
மாடன் அதிர்த்தொரு ஆதாளிச் சத்தமிட்
டாடி வந்தால்
காடை பதுங்குங் கதுவாலி முட்டையுங்
காய்த்திடுமே.

அகப்பட்டோம் மென்ற வர்ணம்.

பல்லவி.

வேடிக்கை வினைதீர்த்திடும் வேம்படி சுடலை (வே)
விளையாடிய மருளாடிகள்
அழகாகிய சபைகூடிய (வே)

விடியாதிதன் மகிமையைச் சொல்ல
முடியா தகமகிழ்வுரு நல்ல (வே)

வேதகாவிய சுந்தா மூர்த்தி
சோதிமேவிய மந்திர மூர்த்தி (வே)

விருப்பிப் பார்த்துச் செல்லடினீயென்னைத்
திரும்பிப்பார்த்து நில்லடி நான்சொன்ன (வே)

வெள்ளைக்குதிரை துள்ளித்திரிய
வள்ளல்க்குரிய வெள்ளிக்கிழமை (வே)

விளங்குமெய்யாய்ச் சித்தானந்தப் படை
முழங்கும் செவ்வாய் மத்தியானக் கொடை.
(வேடிக்கை)

சரணம்.

ஆடிக்கொடையில் கூடிக்கும்பிட
ஆசைக்குற்றிடும் திருவிழா
ஆற்றுவா கரைக்கூட்டு வேம்படி
ஆதிக் கோயிலில்த் திருவிழா
தேடிச்சன்னதி நாடிச் செல்பவர்
சேவைப் பண்புருந் திருவிழா
தெரிசித்தோர்க்குப் பலன் கொடுத்திடும்
திருச்சுடலையின் திருவிழா
சின்ன முதலாளிக் கின்னமுந் திருவிழா
பேச்சி, சேவைத் திருவிழா
தேருமணித் துரைராஜவீரப் பெருமா
ளருள் வித்துவ சேம சவுக்கியத் திருவிழா

பெண்:— வசனம்.

துரையே! இதுதான் இகபர சௌக்கிய முறை இனி நமக்கேது குறை. இது இலங்கும் சுடரில் முளைத்ததாமரை இதை எட்டிக்கடிக்க வருகுதுமான்மரை எட்டுமா, எட்டினாலும் கிட்டுமா. கிட்டாவிடில் முட்டுமா. இதுமட்டுமா. இதோ பாருங்கள் சீரிப்பார்த்தாடுது ஒரு புலி. அதைத் தெளிந்து பார்த்தாடுது சிறுபுலி. அது சிறுபுலியாயிருப்பினும் சரிபுலி. இதைத் தெரிந்து பார்த்தாடுது பலபுலி. இது நிற்க,

ஆடம்பரமாயாடுது ஒருகனி. அதை அன்பாய்ப் பார்த்தாடுது பலகனி. இதன் மர்மம் இன்னதென்று தெரிவியுங்கள் பார்ப்போம்.

ஆண்:— வசனம்.

சிவந்த இதழ்களையுடையவளே! நீ கூறிய கட்டுச்சொல் எட்டுச்சொல்லமைந்த குட்டுச்சொல்லாயிருப்பினும் அதை விட்டுச் சொல்லுகிறேன் கேள். இலங்கும் சுடரில் முளைத்த தாமரை யென்றது சுடலைமாடன். எட்டிக்கடிக்க வருகுது மான்மரை யென்றது. இந்தப் பகவானுடைய திருவடித் தாமரையைப் பெற்று இகபர சுகம் பெறுவதற்காக இங்கு வந்த மக்கட்பிறப்பாளர்களை. எட்டுமா என்றது அவன் பாத தெரிசனை கிடைக்குமா என்ற அர்த்தம். எட்டினாலும் கிட்டுமா யென்றது ஒருவாறு இவனது திருவருட் பிரசாதம் கிடைத்தாலும் இம்மையில் பரமபதம்பெற முடியுமா (முடியாதென்பது கருத்து.) கிட்டாவிடில் முட்டுமாவென்பது அப்புபிருதிவு தேயு வாய்வு ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களமைந்த சொரூபத்தில் முளைத்த கோபம் என்று

சொல்லப்பட்ட கொம்பு பகவானைப் பேய்ப்பாயுமா பாயாது என்றதுதான் அர்த்தம். இது நிற்க, சீரிப்பார்த்தாடுது ஒரு புலியென்றது கோபாவேசத்துடன் திருநடனம் புரிகிற பெரிய முதலாளியை. அதைத் தெரிந்து பார்த்தாடுது சிறுபுலி என்றது இவன் செய்யும் நிர்த்தனத்தைத் தெளிவாய்ப் பார்த்து சின்ன முதலாளியென்றும் முண்டசுவாமி ஆனந்தக் கூத்தாடுகிறார் என்பது கருத்து. சிறு புலியாயிருப்பினும் சரிபுலி என்றது சின்ன முதலாளியென்று உலகம் வழங்கினாலும் பெரிய முதலாளிக்குரிய தபோ பலம் வாய்ந்தவன்தான் என்றது கருத்து. இதைத் தெரிந்துபார்த்தாடுது பலபுலி யென்றது இக்கோயிலுக்கு வந்த கோமரத்தாடிகள் யெல்லாம் சந்திரமூர்த்தியின் நடை நொடி பாவனையைப்பார்த்து விளையாடுகிறார்கள் என்ற அர்த்தம். இது நிற்க. ஆடம்பரமாயாடுது ஒருகனி அதை அன்பாய்ப் பார்த்தாடுது பல கனி என்று தெரிவித்தாயல்லவா! பேச்சியம்மையென்னும் தெய்வம் மஞ்சணை முதலிய செவ்வரளிமாலை யலங்கிர்த கோலத்துடனே விளையாடுவதைப் பார்த்து அநேக பெண்கள் நிர்த்தானந்தத்தில் மூழ்கி ஆனந்திக்கிறார். இதுதான் அர்த்தம்.

பெண்:—

கண்ணுளா! சந்தோஷம் இன்னமொன்று பாடி இவனைத் துதிசெய்யுங்கள்.

பெண்:—

காமாஞ்சிதக்கடலே! இதோ கருணையாய்ப் பாடுகிறேன் கேள்.

காவடிக்காரன் கந்தன் என்ற வர்னம்.

பல்லவி.

வேம்படிக் கோயில்ச் சிங்கக்குட்டி விளை
யாடிய வீரகுறைகர பூசித (வேம்)
வேதாந்தம் திருநடமிடு மாதாந்த தெரிசனம்தரு
மேலக்கோயில்க் கதிபதி மருத்த திடபல
கோலக்காரப் பசுபதி விதித்த துதுகுல (வேம்)
விண்ணவரொடு மனமகிழு ம்
பண்ணவரனுதினம் புகழு ம் (வேம்)
வெள்ளைக்குதிரையில் விரைவொடு
துள்ளித்திரிபன் முறைபொடு (வேம்)
வித்துவ நவரத்தின மணிவீரப் பெருமானபிநய
சத்திய சுயசற்குண மிகுசிவமரு (வேம்)

சரணம.

பூம்பத தெரிசனை தருவான்
பூக்குளி மகிமையைப் பெருவான்
சாம்பலைப் பூசியும் வருவான்
தனிப்படச்சுடலையில்த் திரிவான் (வேம்)
காணிக்கைக் களஞ்சியக் காரன்
கமள்ந்திடுந் தடபுடல்க் காரன்
மாணிக்க நிலையலங் காரன்
வருங்குரி பார்க்கு முதாரன் (வேம்)

ஆண்:— வசனம்.

கட்டிக்கனியே! நான் இந்தக் கடவுளைத் துதிசெய்து திருவருட்பிரசாதம் பெற்றேன் நீயும் துதிசெய்வாயாக.

ஆண்:—

சற்குணகரா! சந்தோஷம். இதோ துதிசெய்கின்றேன்.

பவணகிரியதனில் என்ற வர்னம்

பல்லவி.

பெரியமுதலாளி யென்று பெயரோங்கும் சுடலைக்கண்ணு
அரியதவம் புரியுமென்னை
ஆண்டருள்வாயுன்னை வேண்டினேன் தெய்வமே
(பெரிய)

தொகையறு.

அன்பொடு துதிப்பவரை ஆதரித்தாழ்வது
அருட்கடல்த் தெய்வ முறையே
வம்பொடு பொய் கொலைபுரியும்
வஞ்சகரை நஞ்சென வதைப்பதுந் தெய்வமுறையே.

ஷ்டி பாட்டு சரண எடுப்பு.

சின்னமுதலாளி யென்றும்
தேவகணைப் பேச்சி யென்றும்
சொன்னவாந் தருவதென்றும்
சூட்டும்விதிச்செயல் நாட்டுமுறைப்படி (பெரிய)

ஷ்டி எடுப்பு.

ஆறுமுகமங்கலத்தில்
ஆசுதிசெய்யும் திருவுளமே
கோருமடியார் துதிக்கும்
கோலத்துதி மாமுத்தமிழ் வீரப்பெருமாள்
நித்திய (பெரிய)

நேரிசை வெண்பா.

ஆசாரச் சத்திநிற்கும் ஆறுமுகமங்கலத்து
பூசாரிப்பிள்ளை புரியும் நற் பூசையை
முன்னின்று யேற்குமுதலே யெனைநோக்கி
என்னென்று கேளாததேன்.

என்னென்று கேளாதிருப்பதழகோ சொல்
பொன்னின்ற கோயிற்புரவலா நன்னயமாய்
உரைத்தால் மணக்குமா
உயர்ந்த அகிற் கட்டைதனை
மறைத்தாலது மணக்குமா.

பச்சைப் பிணத்தை பால்வடியத் தின்றுமின்னம்
மிச்சப் பிணத்தில் விருப்பமா இச்சமயம்
பேசாமலொன்றும் பெருமூச்சுவிட்டாயே
கூசாமலென் னிடத்தில்க்கூறு.

(வசனம்.) எல்லாம் வல்ல இறைவனருள்பெற்ற எந் தலே ஈமமதில்க்குடிபுகுந்த இன்பாசக் கடலமுதே மாசிலா மணியே மந்திரமூர்த்தியே மணிவிளக்கே வனபூசைக்கனியே அடியாள் அன்போடு உமது திருவடித்தாமரையில் வீழ்ந் திறைஞ்சி ஆனந்தக்கடலில் மூழ்கினேன். தெய்வமே இனி எனக்கு இகபர சௌக்கியந்தந்தாழ்வது உமது கடமை உமதபயம் உமதபயமே.

ஆண்:—

துணைப்பொருளே! சுடலைமாடசுவாமியைத் தொழுது முடிந்தது. இனி, பேச்சியம்மன் சன்னிதிக்குட் சென்று அந்தத்தாயைத் தெரிசிப்போம்.

சாசகல்யாணி! சந்தோஷம்.

(இருவரும் பேச்சியம்மை முன்னின்று தோத்திரம் செய்கின்றனர்.)

தரவேண்டும் எனதாசை என்ற வர்னம்.

பல்லவி.

குறிபார்க்கும் வனப்பேச்சி
கொண்டாட்டமாய் நிறை (குறி)

சரிபார்க்கப் பிறந்தவ ளாம்
சன்னிதிக்குள் நிறைந்தவளாம்
சாயச் சுங்கடிக் சேலைகுங்குமம்
பூசிப்பங்கயச் சோலைப் பந்தயக் (குறி)

சின்னமுதலாளியுடன் சேர்ந்திலங்கும் பேச்சியம்மை
தெளிந்த வேட்டைக் கோலத்தோடு
துணிந்த சேஸ்டைச் சாலத்தோடு (குறி)

தொகையரு விருத்தப் பண்.

பூதலத்தை யாழ்வதற்கும் பிறந்தாய் நீயே
பூசுரர்க்கு வரமளித்த பொன்னு நீயே
மாதவத்திற் சிறந்திலங்கு மணியு நீயே
மஞ்சணைப்பூக் கோலமந்தமொரு வளர்ந்தாய் நீயே
பேதகத்தை வேரறுத்த பேயும் நீயே
பேச்சியென்று பெயர் படைத்த தாயு நீயே
வேதவித்தாய் நிரைந்திலங்கும் விமலை நீயே
விரைவொடு வந்தருளக் கடைக்கண் விளித்தாள்வாயே.

ஷை பாட்டு.

பச்சைமஞ்சள் பாவாடை பலவிதமாய்ச் சோதிமின்ன
பனிமலர்க்குழக் கனிமகத்துவ
வனிதையர்க்கரு ளினிய அற்புத (குறி)

நாட்டுவளம் பார்க்க வந்தாய்
நன்மையுண்டாக்க வந்தாய்
நம்பியகங்குல தம்பிரானும் புகழும்பர்களும் பணியும்
பதமுந்தரும் (குறி)

ஷை தோகையரு விருத்தப் பண்.

பாதிமதிச் சடையனருள் படைத்தாய் நீயே
பங்கயத்தில் வீற்றிருந்த தாயும் நீயே
சோதிமணிப் பொதுவில் நடம்புரிந்தாய் நீயே
சுடர்க்கொழுந்தாய்த் தோன்றி நிற்கும் சொரூபி நீயே
நீதி முதல் மறையாவு முணர்ந்தாய் நீயே
நிலமகளு மலர்மகளு நிலவு நீயே
சீதமணித் திருமார்பன் தங்கை நீயே
தெரிசித்தேன் தெரிசனை தந்தருள் செய் வாயே.

ஷை பாட்டு.

செவ்வரளிப் பூவழகி செங்குமுத வாயழகி
சித்திரந் தீட்டிய முத்துப் பல்லக்கொடு
ரத்தினக் கோயிலில் விஸ்திரச் சொற்சுவைக் (குறிபார்)

வித்துவச் சொல் விகித மணி
வேதாந்தச் சரப மணி
வீரப்பெருமான் வித்துவ சாரப்பிரபந்தப்படி (குறிபார்)

வசனம்:— நாதா! இந்த ஆனந்தத் தாயை அன்போடு துதித்தோம். திருவருட் பிரசாதமும் பெற்றோம். இனிச் செயுங் கடமையைத் தெரிவித்தருளுங்கள்.

ஆண்:— நொண்டிச்சிந்து.

காமாஞ்சிதக் கடலே, எந்தன் கருத்திற் கிசைந்த தெய்வக் கடலமுதே, கோமளப் பெடையன்னமே, ஒன்று கூறுவேன் கேளாதரவின் வேத முறையாய், பரிமளம் நிறைந் திலங்கும், ஒத்தாசு பட்டியென்று செப்பும் அட்டலக்ஷிமி தங்கும், சரவண புர நகரில், பல பல சௌக்கியத்தில் நிறைந்த தனிப்பொருளாம், இரவியைப் போல் விளங்கும், தவபல இந்திர நாட்டார் குலத்தில் வந்துதித்தவள், குருவுபதேசம் பெற்று, இந்தக் குவலயத்தில் நிறைந்த குணக்கடலாம், தௌனித்திடும் சுடலைமுத்தென்று, துலங்குமன்னவனுக்குமனைவியம்மா, செனித்திடும் பலவேசப், யென்று செப்புவார்களிப் புவியில் அற்புதமுடன் நடமிடும் சுடலை மாடன், திருவருள் நளின மலர்ப்பதத்திற் கடிமையம்மா, மந்திர மூர்த்தியிடம், அருள் வரப்பிரசாதங்கள் பெற்று நிறைந்தவளாம், சந்திர பிம்பமுமினையோ, அந்தத் தையலின் திருமுகத்தின் செல்வமம்மம்மா, நிறைந்திடும் சுடலைமாட, சுவாமியின் நிலைக்குணத்தை, மனத்தில் பதித்தவளாம், சிறந்திடும்பல குறிகள்,முறைப்படி திட்டமாகச்சொல்லி நிற்கும் அட்டலக்ஷுமி, ஆளிருமுலகமெல்லாம், இவள் அதிசயத்தை எடுத்து விரித்துரைப்பார், நாவினில் முத்தளப்பவள், இந்த நாட்டிலுள்ள மானிடர்கள் கேட்டதைச் சொல்வாள், வருஷத்தில் பலதடவை, ஆறுமுக மங்கலத்துக் கன்புடனே சென்று வருவாள், பாவசமருளாடி, இவள் பதிக்குட்குறிக்குவைத்த பணத்தையெல்லாம், கைக்கொடை அடிக்கொடை, யென்ற தனிக்கொடைக்

காலமெல்லாம் முறைப்படியே, கைக்கொடை விருதுடனே, மேளதாளம் கடற்கிணையாய் முளங்கக் கோயிலுக்குள், விரைவுடனெதிர்சென்று, சுடலைமுன் விரும்பும் பாதகாணிக்கை செலுத்தி நிற்பாள், அருள்மிகும் பூசாரி, தெய்வத்தடியாபிள்ளையும் வந்து உபசரிப்பார், சுடலையு மனத்தில்நின்று, இவள் சொன்னவாக்கு பிசகாமல் நிலைத்துநிற்கும், மதிக்கும் சின்ன முதலாளி, பேச்சியுடன் வந்துநின்று பந்தயச்சொற்குறிகள்சொல்லும், துதித்திடும் பாடலுக்கு, முன்னின்று சொன்ன வரந்தந்து நிற்கும் சுடலை மாடன், திருவருட் பிரசாதம், வாழ்க தேவரொடு மூவர் முதல் யாவரும் வாழ்க, மருமலர்த் திருவும் வாழ்க, எங்கு மதிக்கும் பலவேசத்தின் மகிமை வாழ்க, செந்தமிழ் நீடூழி வாழ்க, செழித்து உலகமெல்லாம் தழைத்து வாழ்க, சந்தச் சரப சங்கீத, சாகித்யம் தழைக்கும் வீரப் பொருமாள் பழக்கம் வாழ்க.

இவை குதிரைக்குளம் இந்திரநாட்டார் குல திலக

வன்னியப்பெருமான் கனிஷ்ட குமாரன் குமாரண்டி மீது,

நொண்டிச்சிந்து.

மருமலர்த் திருவருளால், நிறைந்த பொன் வளத்தில் மிகுங் குதிரைக் குளத்தில் மிக்கோன், இருவினைத் தொடர் கடந்த, தெய்வ இந்திர நாட்டார் குலத்தில் வந்துதித்தவன், நிறைந்த வன்னியப் பெருமான், தவத்தில் நிக்ஷியமாய்ப் பெற்றெடுத்த உச்சிதமணி, சிறந்திடுங் குமாரண்டி, யென்று செந்திலம்பதிக் கடவுள் பேருபெற்றவன், திடபல சௌக்கியத்தில், வாகுணை தீரமிகு வீமனென ஓதலாமம்மா, கடல் மடை திறந்ததைப் போல், பலபல கதைப்பழக்கங்கள்பேசி மகிழ்ந்து நிற்பான்,

வில்லுக்கு விசையனிவன், மன வீர தத்துவத்தில் மிகு வல்லவனம்மா, சொல்லுக்கு அரிச்சந்திரன், திரேக சுந்தரத்தில் மன்மதனைய் வந்துதித்தவன், மூத்தோர் சொல்லமுதம், மென்றபடி முதுமொழியைச் சிரத்திற் சூட்டிவைத்து, ஆத்தூர் ஆறுமுக, மங்கலத்தில் அருள் நிறைந்த சுடலை மாடனுக்கு, அடிமையாய் குடிபுகுந்து, வளர்ந்திட்ட ஆடு கிடாய் கோழி பன்றி பாத காணிக்கை, திடமொடு செலுத்தி வைத்தோன், பவுசுள்ள திக்கு விஷயக்கடவுள் கொடைக்குக் கொடை, வற்றாப் பொங்கலும் வைத்து, திரு மாவிளக்குப் பூசை முதல்நடத்தி வைத்தோன், உற்றார் உறமுறையார், குதுகுல உண்மையுற்ற அன்னை பிதா நன்னய மதாய், பாலொடு பவுசுபெற்று, பலபல பாக்கியத்தை ஆழ்வதற்கு வரம் பெறுவான், வேல்மயில் கடவுளருண்டும், வினையில்லை விளங்கும் வீரப்பெருமான் வளங்குந் தமிழ். மரு.

கவி.

பொய்யற்றருள் சேராறுமுகப்
பொருளாயமைந்த மங்கலத்தில்
மைவிட் டகலாச் சித்திரங்கள்
வரைந்து நிறைந்த கோயிலுக்குள்
நெய்விட் டகலா விளக்கேற்றி
நிரையாசனத்தில் நிலையில் நின்று
கைதொட்டணையாக் கற்பூரக்
கனியோ டதிகப் படைப்பேற்றி
சைவப்பொருளாய் நிறைந்திலங்கும்

தருமத் தெய்வங் குடிகொண்ட
தெய்வத் தடியா பிள்ளை செய்யும்
திருநாட் பூசை மகோற்சவத்தை
மெய்யுற்றருளாய்க் கண் குளிர
விருப்புற்றேங்கிப் பார்த்தவர்கள்
எய்திப் பிறவாப் பிறப்பறுத்து
இறைவன் பதத்தை யடைவாரே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

கூடிய சீக்கிரம்
இரண்டாம் பாகம்
வெளிவரும்.

முருகவிலாசம் அச்சுக்கூடம், தூத்துக்குடி.